# ஒரு ஈயின் ஆசை

நாரா நாச்சியப்பன்.



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.worldtamilacademy.com

# பதிப்புரை

அன்னை நாகம்மை பதிப்பகத்தின் இரண்டாவது புத்தகமாக இந்நூல் வெளிவருகிறது.

பாவலர் நாரா. நாச்சியப்பன் இதுவரை சிறுவர்களுக்காக எழுதியுள்ள கதைகள் ஏராளம். இந்நூலில் எட்டுக் கதைகள் உள்ளன.

எட்டும் எட்டு விதமான சுவையுள்ளவை. எல்லாம் சிறுவர்களுக்கென்றே எளிமையாக எழுதப் பெற்றவை. சுவையான இந்தக் கதை நூலைத் தமிழ்நாட்டுச் சிறுவர் சிறுமியருக்குக் காணிக்கையாக்குகின்றோம்.

- பதிப்பாசிரியர்

அன்னை நாகம்மை பதிப்பகம்

நாய் தேவநாதன் ஆடையைப் பற்றி இழுத்தது. நன்றாக உறங்கிக் கொண்டிருந்த தேவநாதன் கண் விழிக்கவில்லை.

என்ன செய்வதென்று தெரியாமல் நாய் திகைத்தது. சிறிது தூரத்தில் ஒரு குளம் இருப்பது தெரிந்தது. அதைக் கண்டவுடன் நாய் பாய்ந்தோடிச் சென்றது. அந்தக் குளத்திற்குள் இறங்கியது. உடல் முழுவதும் நனையும்படி தண்ணீரில் மூழ்கியது. பிறகு எழுந்து தேவநாதன் படுத்திருக்குமிடத்திற்கு ஓடி வந்தது. அவன் அருகில் இருந்த புல் தரையில் புரண்டது. இவ்வாறு குளத்தில் மூழ்கி மூழ்கி எழுந்து வந்து அவன் படுத்திருந்த இடத்தைச் சுற்றிலும் இருந்த புல் தரை முழுவதையும் ஈரமாக்கிக் கொண்டேயிருந்தது.

நேரம் ஆக ஆக அது குளத்திற்குப் போகும் வழியில் இருந்த மரங்களிலும் தீப்பற்றிக் கொண்டது.

அப்போதும் நாய் நெருப்பினூடே புகுந்து பாய்ந்தோடியது. தண்ணீரைத் தன் உடலில் நனைத்துக் கொண்டு ஓடிவந்து, புல்தரையை ஈரமாக்கியது. இடைவிடாமல் அது தன் வேலையைச் செய்து கொண்டே இருந்தது.

காட்டில் எரியும் நெருப்பு, தன் தலைவனை நெருங்கவிடாமல் செய்வதில் அது கண்ணும் கருத்துமாக இருந்தது. அது தன் கடமையை விடாமல் செய்தது.

நெடுநேரம் கழித்துத் தேவநாதன் தூக்கம் கலைந்து கண்விழித்துப் பார்த்தான்.

# 2. போட்டிக்கு வந்த காற்றண்ணன்

கதிரவனும் காற்றண்ணனும் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது அவர்களுக்குள் ஒரு போட்டி ஏற்பட்டது. உலகத்தில் இரண்டு வல்லவர்கள் சந்தித்தால், அவர்களுக்குள் என்ன போட்டி ஏற்படும்? யார் வல்லவர் என்பதைத் தவிர வேறு எதற்காக அவர்கள் மோதிக் கொள்ளப் போகிறார்கள்.

“நான் தான் வல்லவன்!” என்றான் காற்றண்ணன்.

“இல்லை. நான் தான் வல்லவன்!” என்றான் கதிரவன்.

“மெய்ப்பிக்கிறாயா?” என்றான் காற்றண்ணன்.

“முதலில் நீ வல்லவன் என்பதைக் காட்டு. பிறகு நான் என் வல்லமையைக் காட்டுகிறேன்” என்றான் கதிரவன். “சரி அதோ, பூமியில் பார்! தெருவில் கைத்தடி ஊன்றி நடந்து செல்லுகிறானே கிழவன், அவனிடம் நம் வல்லமையைக் காட்டலாம்” என்றான் காற்றண்ணன்.

“போயும் போயும் தள்ளாடி நடக்கும் கிழவனிடமா நம் கைவரிசையைக் காட்ட வேண்டும்?” என்று நகைத்தான் கதிரவன்.

“வீண் பிதற்றல் வேண்டாம். கூறுவதைக் கவனித்துக்கொள். அந்தக் கிழவன் அணிந்திருக்கிறானே மேல் சட்டை, அதை அவன் உடலிலிருந்து பறித்தெறிய வேண்டும்.

கிழவன் உட்கார்ந்திருக்கும் இடத்தை நோக்கினான். நேராக அந்தக் கிழவன் மீது தன் கதிர்களை வீசினான்.

சிரித்த முகத்தோடு தன் ஒளிக்கதிர்களை அவன் கிழவன் மீது செலுத்தினான்.

கிழவனின் குளிர் அகன்றது. வெயில் ஏற ஏறப் புழுக்கம் மிகுந்தது. முதலில் முடங்கியிருந்த கைகளை அகற்றியவன். சிறிது நேரத்தில் வேர்க்கத் தொடங்கியதும் மேல் சட்டையைக் கழற்றிப் பக்கத்தில் போட்டான். மேலும் வெப்பம் மிகவே உள் சட்டையையும் கழற்றிப் போட்டான். வியர்வையைத் துடைத்துக்கொண்டு நடக்கத் தொடங்கினான்.

காற்றண்ணன் கதிரவன் முன் தலை குனிந்தான். “அண்ணலே நீதான் வென்றாய்” என்று பாராட்டினான்.

“உன் வெற்றியின் இரகசியம் என்ன?” என்று கேட்டான்.

வன்முறையும் தாக்குதலும் வெறுப்பை உண்டாக்கும். அன்பும் அரவணைப்பும் ஆதரவைப் பெருக்கும். என் அன்புக்கைகளின் தழுவல் எனக்கு வெற்றி தேடித்தந்தது என்றான் கதிரவன்.

அவன் வெற்றிக் கதிர்கள் உலகெங்கும் பரவிக் கொண்டிருந்தன.